இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 6
இறுதிப்பரீட்சை 2006/2007,
வர்த்தகசட்டம் - LWU 3324/4324
காலம் : 3 மணித்தியாலங்கள்.

---

திகதி: 23.03.2007 நேரம்: பி.ப 1.30 – பி.ப 4.30

---

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

முரணாக எதுவும் குறிப்பிடப்படாத வரையில் உப பிரிவுகளைக் கொண்ட வினாக்களின் ஒவ்வொரு பகுதிக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும் என கருதுக.

1. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டு மாணவனான அசேல பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள தனது கடையில் தண்ணீர் போத்தல் விற்பனை செய்யும் இயந்திரம் ஒன்றை பொருத்த தீர்மானித்து வரையறுக்கப்பட்ட சியாம்ராஜி கம்பனியுடன் இயந்திரத்தை கொள்வனவு செய்யும் வாடகை ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டான். தனது நண்பர்களில் ஒருவனால்,பின் தங்கிய கிராமம் ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கோயில் ஒன்றின் நிர்மாண பணிகளுக்கு இதில் இருந்து பெறப்படும் இலாபத்தை நன்கொடையாக வழங்க தீர்மானித்தான். அவன் 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1ஆம் திகதி தனது கடையில் இயந்திரத்தை பொருத்தினான்.

 பின்வரும் சூழ்நிலைகளில் வெவ்வேறுபட்ட திறத்தவர்களின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் கருத்திற் கொள்க.

 (அ) துரதிஸ்டவசமாக 2006 செப்டெம்பர் மாதத்தில் இருந்து இயந்திரம் தொழிற்பட மறுத்ததுடன் அசேலவினால் பல வேண்டுதல்கள் செய்யப்பட்ட பின்பும் கூட இயந்திரத்தை பொருத்துவதற்கான எந்தநடவடிக்கையையும் கம்பனி மேற்கொள்ளவில்லை.

 (ஆ) தான் எதிர்பார்த்த இலாபத்தை பெற இயலாத அசேல முன்று மாத தவணைக்கட்டணத்தை செலுத்த தவறினான். உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கமைய நிலுவையாக உள்ள ரூ. 12,000/= வை அசேல 7 நாட்களுக்குள் செலுத்த தவறினால் வாடகை நிலுவையை மீளப்பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை கம்பனி மேற்கொள்ளும் என அசேலவுக்கு கம்பனி அறிவித்தது. அசேல குறிப்பிட்ட தொகையை செலுத்த தவறினான். கம்பனி இயந்திரத்தை கையேற்று விற்பனை செய்தது.

 (இ) வாடகைக் கொள்வனவு விலையில் 75% னை அசேல செலுத்தி இருந்தபோதிலும் விற்பனை இயந்திரத்தின் உடைமையை கம்பனி மீள பெற்றுக்கொண்டது.

 (ஈ) "விற்பனை இயந்திரத்தின் உடைமையை பெற்றுக்கொள்ளும் நோக்கில் வாடகைக் கொள்வனவாளருடைய வசிப்பிடத்திற்குள் உட்பிரவேசிப்பதற்கான உரிமையை கம்பனி ஒதுக்கி வைத்துள்ளது". என்ற வாசகத்தை உடன்படிக்கை உள்ளடக்கி இருந்தது.

2. பிரசித்திபெற்ற 'லோகித் பாஸ்மதி' அரிசி மொத்த வியாபாரியான லோகித்த சில்லறை வியாபாரிகளுக்கு அரிசி விற்பனை செய்து வந்தான். 2007 ஜனவரி 23ஆம் திகதி லோகித்த 'லோகித் பாஸ்மதி' அரிசி விநியோகம் தொடர்பான பின்வரும் ஒப்பந்தங்களை மேற்கொண்டான்.

(அ) 200 மூடை முதல் தர 'லோகித் பாஸ்மதி' அரிசியை வெனியாவுக்கு விற்பனை செய்வதற்காக லோகித்த உடன்பட்டான். அரிசியை பெற்றுக்கொண்டவுடன் வெனியா பணம் செலுத்துவதாக உடன்பட்டான். வெனியாவினுடைய பெயரில் லேபல் இட்டு 200 மூடை அரிசியை லோகித்த ஒதுக்கி வைத்தான். அரிசி தயாராக உள்ளது என வெனியாவிடம் லோகித்த கூறினான். எவ்வாறாயினும் 2007ஆம் ஆண்டு ஜனவரி 24 வரையில் வெனியா அரிசியை எடுத்துச்செல்ல வில்லை.மின்சார கம்பி இணைப்பு முறைமையின் சீரற்ற பராமரிப்பு காரணமாக வெனியாவிற்கென ஒதுக்கி வைக்கப்பட்டு இருந்த 200 மூடை அரிசி இருந்த களஞ்சிய சாலையின் பகுதி தீயினால் சேதமுற்றது. அடுத்த நாள் அரிசியை எடுத்துச்செல்ல வந்த வெனியாவிடம் நடந்தவற்றை கூறிய லோகித்த ஒதுக்கிவைக்கப்பட்டு இருந்த அரிசி மூடைகள் வெனியாவினுடையது என கருதப்படுவதால் அவற்றிற்குரிய விலையை செலுத்துமாறு, வெனியாவை வேண்டினான். வெனியா பணம் செலுத்து மறுக்கிறாள்.

வெனியாவிற்கு எதிராக லோகித்தவிற்கு இருக்கக்கூடிய உரிமைகள் பற்றி அவனுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) 150 மூடை 'லோகித் பாஸ்மதி' அரிசியை விற்பனை செய்ய லோகித்த ஹேரத்துடன் உடன்பட்டான். பணம் செலுத்த முன்பு அரிசியுடைய மாதிரி ஒன்றை பரீட்சிக்குமாறு ஹேரத் வேண்டப்பட்டான். கையடக்க தொலைபேசி ஊடாக தன்னுடைய வாடிக்கையாளர் ஒருவருடன் வியாபார கொடுக்கல் வாங்கல் தொடர்பான பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு இருந்ததன் காரணமாக ஹேரத்தினால் அரிசி மாதிரியை பரீட்சிக்க இயலாமல் போனது. தான் கொள்வனவு செய்த அரிசி மாதிரியுடன் ஒத்துப்போக வில்லை என தற்போது கருதும் ஹேரத் லோகித்த வழங்கிய காசோலையை இரத்துச்செய்தான்.

லோகித்தவிற்கு எதிராக ஹேரத்திற்கு இருக்கக்கூடிய உரிமைகள் பற்றி அவனுக்கு ஆலோசனை வழங்குக.

(இ) வாராந்த தவணைக்கட்டணத்தின் அடிப்படையில் 100 மூடை அரிசி மாதாந்தம் அனுப்பப்படும் என்ற உடன் பாட்டில் லோகித்த 300 மூடை முதல் தர லோகித் பாஸ்மதி அரிசியை சமிலவிற்கு விற்றான். ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையில் ஏறக்குறைய அரைவாசி அரிசி விநியோகிக்கப்பட்டு பணம் செலுத்தப்பட்ட பின்பு அரிசி மூடைகளின் சில முதல் தரம் அல்ல எனவும் ஆயின் அவை இரண்டாம் தரம் என கண்டு பிடிக்கும் சமில அவற்றை ஏற்க மறுக்கலாம் என தீர்மானித்தான். ஆகவே அவன் மேலதிக விநியோகங்களை ஏற்க மறுத்தான்.

லோகித்தவிற்கு எதிராக சமிலவிற்கு இருக்கக்கூடிய உரிமைகள் பற்றி அவனுக்கு ஆலோசனை வழங்குக.

(ஈ) 2007 ஜனவரி 30ஆம் திகதி ஜயசுந்தரவிற்கு மீள விற்பனை செய்யும் நோக்குடன் 500 மூடை இரண்டாம் தர 'லோகித் பாஸ்மதி' அரிசியை கொள்வனவு செய்ய லால் உடன்பட்டான். உடன்படிக்கைக்கு அமைய

2007 ஜனவரி 29ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பதாக அரிசி மூடைகளை லாலினுடைய கடைக்கு அனுப்பி வைத்திருத்தல் வேண்டும் எவ்வாறாயினும் பல்வேறு சிரமங்களின் மத்தியில் அவற்றை 2007 பெப்ரவரி 10ஆம் திகதியே லோகித்தவால் அவற்றை அனுப்பிவைக்க முடிந்தது.

லோகித்தவிற்கு எதிராக லாலிற்கு இருக்கக்கூடிய உரிமைகள் பற்றி அவனுக்கு ஆலோசனை வழங்குக.

3. "இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்து கைமாற்றத்தகு சாதனங்களும் கைமாற்றப்படக்கூடியவை. எவ்வாறாயினும் அத்தகைய சாதனங்கள், குறிப்பாக, பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள கைமாற்றப்படத்தக்க சாதனங்களின் பண்புகளின் அடிப்படையில் மாத்திரமன்றி ஆயின் திறத்தவர்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் வசதிகள் அத்தகைய சாதனங்களுக்குரிய திறத்தவர்களை பாதுகாக்கும் உரிமைகள் தொடர்பான பொறிமுறைகள் உள்ளடங்கலாக அத்தகைய சாதனங்களின் விசேட பண்புகளின் அடிப்படையில் ஏனைய கைமாற்றப்படத்தகு சாதனங்களில் இருந்து வேறு படுகிறது".

இக்கூற்றின் வலிதான தன்மையை தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் ஏதேனும் நியதிச்சட்ட ஏற்பாடுகள் இருப்பின் அவற்றுடன் தொடர்புறுத்தி மதிப்பிடுக.

4. (அ) "பொதுவாக இழப்பீட்டு காப்புறுதி மற்றும் எதிர்பாரா நிகழ்வு காப்புறுதி என்பன குறிப்பாக ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றுத".

கருத்துரைக்க.

(ஆ) இலங்கையிலுள்ள முன்னணி காப்புறுதி கம்பனி ஒன்றில் ஒப்படைக்கவென காப்புறுதி நகல் படிவம் ஒன்றை ரஞ்சித் தயாரிக்கின்றான். எவ்வாறாயினும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விளக்கங்கள் பெற உமது உதவியை நாடுகிறான். முதலாவது, தனது பெண் நண்பிக்காக ஆயட்காப்புறுதி ஒன்றை பெற்றுக்கொள்ள முடியுமா, இரண்டாவதாக, தீக்காப்புறுதி ஒன்று பெற்றுள்ள வேளையில் தன்னுடைய கடையில் தீச்சம்பவம் ஒன்று இடம்பெற்றதை அடுத்து கடையில் உள்ள எஞ்சிய பொருட்களை விற்பனை செய்ய முடியுமா, மூன்றாவதாக ஆயுட் காப்புறுதி நகல் படிவத்தில் தன்னை மது அருந்தாதவன் எனக்குறிப்பிட்டு ஆயின் ஒப்பந்தம் முடிவடைவதற்கு முன்பதாக தன்னுடைய பெண் நண்பி தன்னை விட்டு சென்றமைக்காக தான் மது அருந்தும் கட்டாயத்திற்கு உட்படுதல் போன்ற சந்தர்ப்பங்கள் தொடர்பில் ஆலோசனை பெற விரும்புகிறான்.

மேலே தரப்பட்ட சூழ்நிலைகளில் விளக்கங்களை பெற்றுக்கொள்ள ரஞ்சித்திற்கு உதவுமாறு நீர் வேண்டப்படுகிறீர். அத்துடன் உமது கருத்து விளக்கங்கள் சட்டபூர்வமாக நியாயப்படுத்தப்படல் வேண்டும்.

5. 21வது பிறந்த தின பரிசாக கயங்காவுக்கு மனோரி 1000 ரூபா பெறுமதியான காசோலையொன்றை வழங்கினான். கயங்கா கொடுப்பனவு பற்றிய எந்த அறிவுறுத்தல்களையும் வழங்காது, காசோலையின் பின்புறத்தில் கையொப்பமிட்டு அதனை வழங்கினாள். தன்னுடைய நண்பிகளில் ஒருத்தியுடைய வாசிக சாலை கட்டணத்தை செலுத்துவதற்காக தன்னிடம் கடன்கேட்ட சியாமனுக்கு காசோலையை கயங்கா வழங்கினாள். சியாமன்னிடம் இருந்து காசோலையை திருடிய பாலா தன்னுடைய வாடகையை செலுத்துவதற்காக 'பாலாவுக்கு கொடுப்பனவு வழங்குக' என கயங்காவுடைய கையொப்பத்திற்கு முன்பாக சொற்களை சேர்த்து தன்னுடைய வாடகையை செலுத்தினான். பாலா வசித்து

வருகின்ற வீட்டு உரிமையாளரான கமல் காசோலையை தன்னுடைய வங்கிக்கு எடுத்துச்சென்றான். வங்கி இதனை கட்டு பிடிக்காது காசோலையை கொடுப்பனவுக்காக மனோரியினுடைய வங்கிக்கு அனுப்பியது.

வங்கி உட்பட பல்வேறுபட்ட திறத்தவர்களின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் பின்வரும் சந்தர்ப்பங்களில் கருத்திற்கொள்க.

(அ) குறுக்குக்கோடு இடப்படாத காசோலைக்கு மனோரியினுடைய அறிவுறுத்தல்களை மதிக்காது காசோலை மீள திரும்ப முன் 1000 ரூபாவை வங்கியிலிருந்து எடுக்க கமலுடைய வங்கி அனுமதி அளித்தது.

(ஆ) மனோரியால் வழங்கப்பட்ட காசோலை 'கணக்கு வைத்திருப்பவருக்கு செலுத்தவும்' எனக் குறுக்குக்கோடிட்ட அச்சிடப்பட்ட பொது படிவம் ஒன்றில் ஆக்கப்பட்டிருந்து, வேறுபாடான எந்த அறிவுறுத்தல்களையும் பெறாது காசோலைக்குரிய பணத்தை மனோரியினுடைய வங்கி, கமலுடைய வங்கிக்கு செலுத்தியிருந்தால்

(இ) மனோரியால் வழங்கப்பட்ட காசோலை 'பணக்காசோலை' யாக இருந்து ஆனால் அதிலுள்ள தொகையை ரூபா 10,000 ஆக பாலாவினால் மாற்றப்பட்டு இருந்து அத்துடன் காசோலையை கவுண்டரில் சமர்ப்பிக்கும் போது அக் காசோலைக்குரிய பணத்தை மனோரியினுடைய வங்கி செலுத்தியிருப்பின்.

6. (அ) சமன் ஜாயாவிடம் இருந்து 25 போத்தல் 'நெக்டார்' குளிர்பானத்தையும் கப்ராலிடம் இருந்து 21 அங்குல வர்ண தொலைக்காட்சி ஒன்றையும் வாங்கினான். தொலைக்காட்சி பாவிக்கப்பட்ட ஒன்று அத்துடன் தொழிற்படக்கூடிய நிலையில் இருந்ததோடு சில திருத்தங்களும் செய்யப்பட வேண்டியிருந்தது. இரண்டு வகையான பொருட்களுக்கும் அவன் விலையை செலுத்தினான். திருத்தம் செய்த பின்பு தொலைக்காட்சியை சமன் பாவித்தான். குளிர்பானங்களை தன்னுடைய விருந்தினர்களுக்கு பரிமாறினான். எவ்வாறாயினும் யாரோ ஒருவரால் திருடப்பட்ட குளிர்பானத்தை ஜாயா வாங்கியிருந்தான் என்பதை சமன் தற்போது கண்டு பிடித்தான். இதே போன்று, தொலைக்காட்சியை விற்பனை செய்த நேரத்தில் கப்ரால் தொலைக்காட்சி உரிமையாளரான பியங்காவிடம் இருந்து இரவலாக பெற்றிருந்தான் எனவும் ஆனால் மிக விரைவிலேயே பியங்கா தொலைக்காட்சியை கப்ராலிற்கு அன்பளிப்பாக வழங்கினாள் எனவும் அறிந்து கொண்டான்.

கப்ரால், ஜாயா ஆகியோருடன் மேற்கொள்ளப்பட்ட இரண்டு ஒப்பந்தங்களையும் முடிவுறுத்துவதாக அறிவித்த சமன் அவற்றுக்கு செலுத்தப்பட்ட விலையை மீள தருமாறு கோரினான்.

ஜாயாவுக்கும் கப்ராலுக்கும் ஆலோசனை வழங்குக.

(ஆ) "பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றில் வாங்கப்பட்ட பொருட்கள் 'நோக்கத்துடன் ஒத்திருத்தல்' அல்லது ' வாணிபத்திற்கு உரிய தரத்தையுடையது' என உத்தரவாதப்படுத்தும் உட்கிடையான நிபந்தனையொன்று இல்லை. எவ்வாறாயினும் எந்த நோக்கத்திற்காக பொதுவாக பொருட்கள் வாங்கப்படுகின்றதோ அந்த நோக்கத்துடன் பொருட்கள் ஒத்திருக்கின்ற போது அவை வணிகத்திற்குரிய பொருட்களாகும்".

இக்கூற்றின் சரியான தன்மையை தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் நியதிச் சட்ட எற்பாடுகள் ஏதேனும் இருப்பின் அவற்றுடன் தொடர்புறுத்தி ஆராய்க.

7. பொருத்தமான இடங்களில் தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புறுத்தி பின்வருவனவற்றை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(அ) வாடகை கொள்வனவு உடன்படிக்கை ஒன்றின் வாடகைக்கொள்வனவாளர் மற்றும் பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றின் வாங்குணர்.

(ஆ) நாணயமாற்று உண்டியல் ஒன்றும் ஒரு வாக்குறுதி பத்திரமும்

(இ) இலக்கம் 11, 1896ஆம் ஆண்டின் பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரிவு 25 மற்றும் ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை.

8. பின்வருவனவற்றில் இரண்டினைப்பற்றி குறிப்பு எழுதுக.

(அ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றின் உட்கிடையான நிபந்தனைகளும் நியதிகளும்.

(ஆ) நாணயமாற்று பத்திரமொன்றின் சமர்பிப்பு.

(இ) இலக்கம் 26, 1980 (திருத்தப்பட்டவாறான) உணவுச்சட்டம்

(ஈ) நுகரவோர் விவகார அமைப்பு

(பதிப்புரிமைபெற்றது)